பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 11 2024 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இன்று ஆறு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

2. தமிழ்நாட்டில் சமூக அரசியல் நிலப்பரப்பை உருவாக்கியதில், இலக்கியம், மொழி மற்றும் அரசியல் கூறுகள் முக்கிய பங்கு வகிப்பதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் குரங்கம்மை நோயினை தடுப்பதற்காக பல முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஹைலோ ஓபன் பேட்மிட்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் மாளவிகா பன்சோட் முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இன்று ஆறு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

முதலில் ஆஸ்திரேலியா செல்லும் திரு ஜெய்சங்கர், பிரிஸ்பெயின் நகரில் அமைக்கப்பட்டுள்ள நான்காவது இந்திய தூதரகத்தை அவர் திறந்து வைக்கிறார்.

அந்நாட்டின் தலைநகர் கான்பராவில் நடைபெறவுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர்கள் சந்திப்பில் ஆஸ்திரேலிய அமைச்சர் பென்னி வாங்குடன், இருதரப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் உரையாற்றவுள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய வம்சாவளியினர் மற்றும் தொழில் அதிபர்களை தனித்தனியாக சந்தித்து அவர் பேச்சு நடத்துகிறார்.

ஆஸ்திரேலிய பயணத்தை முடித்துக்கொண்டு வரும் 8-ஆம் தேதி சிங்கப்பூர் புறப்படும் திரு ஜெய்சங்கர், ஆசியான் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்கிறார்.

சிங்கப்பூர் தலைவர்களை சந்தித்து இருநாட்டுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் சமூக அரசியல் நிலப்பரப்பை உருவாக்கியதில், இலக்கியம், மொழி மற்றும் அரசியல் கூறுகள் முக்கிய பங்கு வகிப்பதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

கேரள மாநிலம் கோழிக்கோட்டில் நடைபெற்ற கலை மற்றும் இலக்கியத் திருவிழாவில் உரையாற்றிய அவர், மனித மாண்பிலும், கலாச்சாரத்திலும் வேர்கொண்டிருக்கும் திருக்குறள், சிலப்பதிகாரம், புறநானூறு, தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கியங்களை அரசியல் கட்சிகள் மக்களிடம் எடுத்துச் சென்றதாக அவர் தெரிவித்தார்.

சமத்துவம், பகுத்தறிவு, மூடநம்பிக்கை எதிர்ப்பு ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துரைக்க இலக்கிய மொழியியல் கூறுகள் பயன்பட்டதாக அவர் கூறினார்.

பண்பாட்டு திருவிழாக்கள், கல்வித்திட்டம் ஆகியவை தமிழ் மொழி அடையாளத்தின் தனித்துவத்தை பாதுகாப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பொழுதுபோக்கு சினிமாவில், அரசியல் கருத்துகளை எந்த சிக்கலும் இல்லாமல் வெளிப்படுத்தும் வசனங்கள் ஒரு கலையாக மாறி கிராம, நகர மக்களை அரசியல் கருத்துகள் சென்றடைந்ததாக அவர் கூறினார்.

தமிழ்நாடு, கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கு இடையேயான மொழியுறவு தொடர்பான வரலாறு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டது என்றும், இரு மொழி இலக்கியங்களும் மிகச் சிறந்தவையாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் குரங்கம்மை நோயினை தடுப்பதற்காக பல முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்நோய் குறித்த நிலையான வழிமுறைக் கையேட்டினை அவர் நேற்று வெளியிட்டார்.

விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் குரங்கம்மை தொற்றுநோய் குறித்த தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஷார்ஜாவில் இருந்து திருச்சிக்கு வந்த பயணியிடம் எடுக்கப்பட்ட ரத்த மாதிரிகள் சென்னையில் உள்ள கிங் ஆய்வகத்தில் ஆரம்பகட்ட பரிசோதனை முடிவு சம்பந்தப்பட்ட நபருக்கு குரங்கம்மை தொற்று இல்லை என கண்டறியப்பட்டதாக அவர் கூறினார்.

குரங்கம்மை குறித்த சந்தேகங்களுக்கு 104 என்ற எண்ணை தொடர்புகொண்டு தகவல்களைப் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 21 நாட்களில் குரங்கம்மை தொற்று பரவியுள்ள 116 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டவர்கள் காய்ச்சல், தோல் கொப்புளங்கள், கழுத்தில் நெறிகட்டுவது ஆகிய அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அரசு மருத்துவமனை அல்லது சுகாதார மையங்களை அணுகுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தீபாவளி பண்டிகை முடிந்து ஊர்திரும்பும் பயணிகளின் வசதிக்காகவும், கூட்ட நெரிசலைக் குறைகும் வகையிலும் இந்திய ரயில்வே பல சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

தில்லியில் இருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு 20 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

தெற்கு ரயில்வேயும் இன்று சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

தாம்பரம் - திருச்சி இடையே இன்று காலை 8.30 மணிக்கு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

இது பிற்பகல் மணி 1.40க்கு திருச்சி சென்றடைகிறது. மறுமார்கத்தில் இன்றிரவு மணி 10.50க்கு புறப்படும் ரயில் நாளை காலை மணி 6.10க்கு சென்னை வந்தடைகிறது.

சென்னை எழும்பூரில் - மதுரை விரைவு ரயில் இன்று காலை மணி 10.15க்கு புறப்படுகிறது. இந்த ரயில் மாலை மணி 6.30க்கு மதுரை சென்றடைகிறது.

மறுமார்கத்தில் மதுரையில் இருந்து இன்று மாலை 7.15க்கு இயக்கப்படும் ரயில் நாளை காலை மணி 3.20க்கு தாம்பரம் வந்தடையும் என்று தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் பெய்துவரும் கனமழையால் நேற்று அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் தண்ணீர் புகுந்தது.

கோணேரிப்பட்டி பகுதியில் உள்ள வீடுகளிலும் தண்ணீர் புகுந்ததால் மக்கள் பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக நாகர்கோவிலை அடுத்த புதுகிராமம் பகுதியில் வீடுகளுக்குள் வெள்ளம் சூழந்தது.

இதனால் அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களை அம்மாவட்ட ஆட்சியர் திருமதி அழகு மீனா நேரில் சந்தித்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் பாரக்ஸ் பகுதியில் கனமழை காரணமாக பெரிய மரம் ஒன்று வேரோடு சாய்ந்து விழுந்ததில் காரில் பயணம் செய்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஸ்பெயின் நாட்டின் **Valencia** பகுதியில் பெய்துவரும் கனமழை காரணமாக அங்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதுவரை 211 பேர் உயிரிழந்துள்ளதாகவும், பாலங்கள், சாலைகள் பெருமளவு சேதமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு பிரதமர் தெரிவித்துள்ளார்.

-------------

இலங்கை தலைநகர் கொழும்புவில் தீபாவளி கொண்டாட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. இதனை அங்குள்ள இந்திய தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது. ஏராளமான இந்தியர்கள் மற்றும் இலங்கையை சேர்ந்தவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

-------------

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புத்துறை சார்பில் ஊழல் தடுப்பு குறித்த முன்னெச்சரிக்கை மற்றும் விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் நேற்று கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

-------------

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் மத்திய மக்கள் தொடர்பு அலுவலகம் மற்றும் தேசிய மனிதவள மேம்பாட்டு நிறுவனம் ஆகியன சார்பில் கோவை மாவட்டம் நாயக்கன்பாளையம் ஜீவகாருண்ய சேவா ஆசிரமத்தில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

-------------

நாகை மாவட்டத்தில் பிரச்சி பெற்ற சிக்கல் சிங்காரவேலர் ஆலயத்தில் கந்தஷ்டி விழா நடைபெற்றது.

-------------

திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் 2025ஆம் ஆண்டுக்கான மாதாந்திர நாட்காட்டி விற்பனை தொடங்கப்பட்டுள்ளது.

-------------

பழனி அருகே விவசாய நிலங்களில் பகல் நேரத்தில் உலவும் ஒற்றைக் காட்டு யானை நடமாடுவது குறித்து விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர். வனத்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

டென்மார்க்கில் நடைபெற்று வரும் ஹைலோ ஓபன் பேட்மிட்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் மாளவிகா பன்சோட் முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் அவர், டென்மார்க்கின் **Julie Davall**-ஐ 23-21, 21-18 என்ற செட் கணக்கில் அவர் வீழ்த்தினார்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் மாளவிகா, மற்றொரு வீராங்கனை **Miablichfeldt**-ஐ எதிர்கொள்கிறார்.

----------------

ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்ற சுவிஸ் ஓபன் வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் **Atanu Das** வெண்கலப் பதக்கம் வென்றார்.

சுவிட்சர்லாந்தின் தாமஸ் ரூஃபரை 6-4 என்ற புள்ளிக் கணக்கில் அவர் தோற்கடித்தார்.

**<<<<The End>>>>**